கல்கி

நிறுவனர்

6-10-68

விலை 20 காசு

மது என்னும் மாபாதகம்!

மனிதன் வாழப் பிறந்தவன்.

வாழப் பிறந்த மனிதனின் வாழ்வு வாழ்வாக இருந்திடல் வேண்டும்.

வாழ்வு வாழ்வாக வளம் பெற்றிட மனிதன் மனிதனாக வாழ்ந்திடல் வேண்டும்.

மனிதன் மனிதனாக வாழ்ந்திட நல்ல பல பண்புகள் அவனிடத்திலே குடிகொண்டிருக்கவேண்டும். அந்த வகையில் மக்கள் தங்கள் வாழ்வில் போற்றி வளர்க்கப்பட வேண்டிய பண்புகளுள் ஒன்று கள்ளுண்ணாமை யாகும்.

தீண்டாமைக்கு அடுத்த படியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று உண்டானால் அது குடி என்கிற சாபக்கேடுதான் என்று கூறுகிறார் அண்ணல் காந்தி அடிகள்.

"உண்ணற்க கள்ளை
உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்"

என்பது வள்ளுவர் வாக்கு.

மது அருந்திய ஒருவன் தன்னையே மறந்து விடுகிறான். போதை நீடிக்கும் வரையில் பயனுள்ள எதனையும் ஆற்ற இயலாதவனாக வலிவிழந்தவனாக—மனமும் உடலும் தளர்ச்சி பெற்றவனாக — நினைத்துப் பார்க்க முடியாத கிளர்ச்சிகளில் ஈடுபடும் தன்மையினனாக—மாறி விடுகிறான். தன்னை மட்டுமல்ல—பெற்ற தாயை—அன்பு தாரத்தை—உற்றார் உறவினரை — ஏனைய மற்றோரையும் நாசத்துக்குள்ளாக்கி இழிவினையும், இடரினையும், இன்னல் பலவற்றையும் தந்திடுகிறான். தாய், மனைவி, சகோதரி — இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அறவே மறந்திடுகிறான் — வெட்கப்படக்கூடிய வேதனைத் தரத்தக்க சாதனைகளிலே ஈடுபடுகிறான்.

"மது அருந்துவதில் தவறில்லை; அதனை அருந்துவதன் மூலமாக நிறைந்த உற்சாகத்தினையும், அளவற்ற பயனையும் எய்திட இயலும். ஆனால் அருந்துகின்ற மதுவிலே அளவு இருந்திடல் வேண்டும்" என்று வாதிப்போரும் உண்டு. இது அர்த்தமற்ற—பொருளற்ற பகுத்தறிவிற்கு ஒவ்வாத வாதம் ஆகும்.

இவ்வண்ணம் வாதமிடுவோரும் இருந்திடுவர் என்பதனை தம் அகக் கண்ணால் முன் கூட்டியே அறிந்த வள்ளுவர்,

"களித்தானைக் காரணம்
காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று"

என்று குறிப்பிடுகின்றார்.

மேல்நாட்டறிஞர் பலரும் மதுவும் மாதுவும் மனிதனைக் கெடுக்கவல்ல சாதனங்கள் என்பதனை ஒப்புக் கொண்டுள்ளார்கள். மது அருந்துவதன் கொடுமையை வெட்ட வெளிச்சமாக்குகிறார் வள்ளுவர்.

"ஈன்றாள் முகத்தேயும்
இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி"

என்று அவர் வியக்கிறார்!

பூரண மதுவிலக்கு என்பது போதைதரும் பானங்கள், பொருள்கள் ஆகியவற்றின் விற்பனையை அடியோடு தடை செய்வதாகும். ஆனால், இன்றைய தினம், இதற்கு மாறாக, காந்தீய வாதிகள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் அதிகமாக உள்ள நாடு என்றும், காந்தீய வாதிகளால் நடாத்தப்படுகின்ற ஆட்சியினை உடைய நாடு என்றும் பெருமையோடு போற்றப்படுகின்ற இந்த நாட்டிலேதான், சில பல மாநிலங்களில் மக்கள் மது அருந்திட அனுமதியும், ஆதரவும், ஊக்கமும், ஏற்றமும் தந்திடுவதைக் கண்கூடாகக் கண்டிடுகிறோம். மதுவிலக்கைத் தளர்த்திய மாநில அரசுகள் கூறுகின்ற காரணம் மதுவால் ஆயிரக்கணக்கான—இலட்சக்கணக்கான — கோடிக்கணக்கான ரூபாய்களை இலாபமாகப் பெற்றிடலாம் என்பதாகும். ஆனால், அந்த மாநில அரசுகள் கோடிக்கணக்கான மக்களின் பண்பாடு அழிவு படுவதை உணரவோ—ஏற்கவோ மறுக்கிறார்கள். மது என்னும் மாபாதகம் அத்தகு அரசுகளுக்குப் பண்பாட்டினை விட பொருளையே உயர்த்திக்காட்டுகிறது. நல்லதிது தீயதிது என்பதனை மது, மாறாக உணர்த்துகிறது.

பண்பாடு குறிப்பிட்டு வரையறுக்க முடியாத ஒன்று. அதற்கு விலை பேசிடுவது மது. மதுவால் பொருளைப் பெற்றுகொண்டிருக்கும் அரசுகள் மாதுவால் பொருள்பெற நினைத்தாலும் வியப்பதற்கில்லை. மதுவிலக்கினைத் தளர்த்தி கள்ளுக்கடைகளை உருவாக்குவதில் மென்மேலும் முயற்சிகள் பலவற்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன மாநில அரசுகள். இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் அந்த மாநில அரசுகள் மது என்னும் மாபாதகத்தின் பாங்கினை அறிந்தே தீரும்.

"ஒரு மணி நேரத்திற்கு இந்தியா முழுமைக்கும் என்னைச் சர்வாதிகாரியாக நியமித்தால் முதல் காரியமாக நான் என்ன செய்வேன் தெரியுமா? நஷ்ட ஈடு கொடுக்காமல் எல்லாக் கள்ளுக் கடைகளையும் மூடிவிடுவேன்"

இப்படித் அழுத்தந்திருத்தமாக—ஆணித்தரமாகக் கூறியவர் யார்?

அன்புள்ளம் கொண்ட அண்ணல் காந்தி அடிகள்!

அன்புள்ளம் கொண்ட அண்ணல் இப்படிக் கூறுவானேன்?

மது என்னும் மாபாதகம்தான்,

"நான் உயிரோடிருக்கும் வரை இந்த அரசில் மதுவிலக்குக் கொள்கை நிலைத்தே நிற்கும் எந்த நிலையிலும் இந்த உறுதி மாறாது"

இப்படி தெளிந்த சிந்தையோடு கூறியவர் யார்?

அவர்தான் முதலமைச்சர் அறிஞர் அண்ணா!

ஆம்! அவர்தான் உண்மை காந்தியவாதி!

—"மு. சு."

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் செப்டம்பர் மாத பட்டியல் அனுப்பப்பட்டு உள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி'

குற்றம் ஒன்றை காரணமாக இன்னது நிகழும் என்பதை முன்னதாக உணர்ந்து, அதனைக் காத்துக்கொள்ளும் திறனற்ற அரசனது நாடு, தீப்பட்ட வைக்கோற்போல அழிந்து விடும்.

—குறள்

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 6—10—68 இதழ் 11

காந்தி நூற்றாண்டு விழா!

இத்திங்கள் இரண்டாம் நாளை, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஒரு திருநாளாகக் கொண்டாடி இருக்கிறது. காரணம் 99 ஆண்டுக்கு முன் இந்த நாளில்தான் இந்திய சுதந்திரத்தின் தந்தை என்று உலகோர் அனைவராலும் ஒரு மனதாகப் போற்றப்படும் காந்தியடிகள் பிறந்தார்.

இந்த ஆண்டு அந்த நாளில் காந்தியடிகளின் 100 வது வயது தொடங்குகிறது. இந்த ஆண்டு முழுவதும் காந்தியடிகளின் புனிதப் பெயரைச் சொல்லி நாட்டு மாந்தர் அனைவரும் தாங்கள் கடந்து வந்த பாதையினை ஒருமுறை திரும்பிப்பார்க்கக்கூறி முழங்குவார்கள்.

இந்திய சுதந்திரத்தின் போக்கை, அகிம்சைமுறையிலும், அறவழியிலும் திருப்பிவிட்ட முழுப் பெருமையும் காந்தியடிகளுக்கேச் சொந்தம் என்பதில் கருத்து வேறுபாடு யாருக்கும் இருக்க முடியாது.

காந்தியடிகளுடைய அறவழித் தத்துவங்கள் இந்த நாட்டு மக்களது இதயத்தை இதமாக நீவிவிட்டிருக்கிறது என்பதிலும் முரண்பட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

தென் ஆப்பிரிக்காவின் டர்பனிலிருந்து திரும்பி வந்து, திலகர் போன்றவர்களது பிடியிலிருந்த சுதந்திரப் போரட்டத்தை தம் பிடிக்குக் கொண்டு வந்த பின்னரேதான், போராட்ட முறையில் ஒரு ஒழுங்கும்—நியதியும் அறமுறையும் புகுந்தது என்பதையும் மறுப்பார் இல்லை.

சூறுவளிக்கும், சுழலுக்குமிடையே சிக்கித் திசை புரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த சுதந்திரக் கலம் காந்தியடிகள் மீகான் பொறுப்பேற்றுக்கொண்டதன் அப்புறம்தான் தொல்லைகளையும், துயரங்களையும் கடந்து அமைதிப் பாதையில் செல்லத் தொடங்கியது என்பதையும் எதிர்ப்பாரில்லை.

மொத்தத்தில் காந்தியடிகள், இந்திய அரசியலில் நுழைவுபெற்றபோது — இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் அத்துணைப் பேரும் திக்குத் தெரியாததொரு காட்டில் சிக்கித் தவித்த நிலையினராகவே இருந்தனர். அந்த நிலையிலிருந்துமீட்டு, வழிகாட்டி, தலைமையேற்று அறிவுரைகள் தந்து, அமைதி வழிப்படுத்தி சுதந்திரத்தையும் பெற்றுத் தந்திருக்கிருர்.

இந்திய சுதந்திரம் பெறப் பெற்றதில் காந்தியடிகளுக்குப் பிடிக்காத ஒரேயொரு சம்பவம் மட்டும் நிகழ்ந்து முடிந்தது, அதுதான் பாகிஸ்தான் பிரிவினை. அந்தப் பிரிவினையின் எதிரொலியே, 19 ஆண்டுகளுக்கு முன் அவரது ஆவியையும் குடித்துத்தீர்த்தது.

இந்திய அரசியலில் எந்தவொரு தத்துவத்தை அவர் மிக அதிகமாய்ப் போதித்து செயற்படுத்தி வந்தாரோ, அதே தத்துவத்திற்கு எதிரான ஒரு சக்தி அவரது உயிரை விழுங்கிக் களித்தது!

அறவழி—அகிம்சை என்ற தத்துவத்தை மக்களது உள்ளத்தில் எத்த அளவுக்கு ஆழப்பதித்தாரோ, அதே அகிம்சைக்கு எதிரான வன்முறை அவரைப்பலிகொண்டு விட்டது.

அறிவுரைகளும், அறவுரைகளும் வழங்கப்படுவதென்பது மிகமிக எளிதான செயலேயாகும். ஆனால் சொல்லியவாறு நடந்து காட்டுதல் என்பது அருமையிலும் அருமையாம்! அந்த அருமையைச் செய்து காட்டி அதன் மூலம் அகமிக மகிழ்ந்து இருந்தவர் காந்தியடிகள்.

வாடிய பயிரைக் காணும்போதெல்லாம் நானும் வாடினேன்; இலையுதிர்ந்த மரங்களைக் காணும்போதெல்லாம் என் இன்பம் உதிர்ந்தது. பசித்த முகங்களைக் காணும்போதெல்லாம் எனக்கும் பசித்தது! என்று பாடினார் வடலூர் வள்ளலார். அதேபோல் ஏழையர்தம் இன்னல், இடர் அனைத்தையும் தன் இன்னலாய், இடராய் ஏற்று சாதாரண ஒரு மனிதரிலும் மனிதராகவே காட்சி தந்ததுடன், நடந்தும் காட்டிய சீர்மை, காலகாலத்துக்கும் நின்று நாட்டுக்கு வழி காட்டத்தக்கதாகும்.

காந்தியடிகளது, பெயரை, ஒருமுறை உச்சரிக்கும்போது சத்திய வாழ்க்கை நினைவுக்குவரும். இன்னொருமுறை சொல்லும்போது அறவழிகள் கண்முன் நிற்கும். மீண்டும் கூறுகிறபோது அகிம்சை நெறிகள் எதிரே நின்று இடித்துக் காட்டும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி, மக்களையும் தம்வயப்படுத்த அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்! பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல!!

காந்தியடிகள் பிறப்பெடுத்தபோது இந்தியத் துணைக்கண்டத்தின் நிலைமைவேறு. அரசியல் நுழைவுக் காலத்தின் நிலைமைவேவேறு. துப்பாக்கிக் குண்டுக்கு மார்பைத் தந்து துடித்து வீழ்ந்தபோது இருந்த நிலைமை வேறு. நினைவுக்குரியவராய் ஆகி, நூற்றாண்டு நினைவு விழாவுக்குரியவராகவும் ஆகிவிட்டிருக்கிற இப்போதைய நிலைமைவேறு.

காந்தியடிகளின் அரசியல் தலைமையில் இட்டதே சட்டம் என்ற நிலைமைகளும் இருந்தன; 'இவையும் பொருந்துமே' என்று பிறரால் எடுத்துக் காட்டப்பெற்று, ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைமைகளும் இருக்கத்தான் செய்தன. என்றாலும் அவரது மிகப்பெரும்பான்மையான விழைவுகளே அரசியலில் முதலிடம் பெற்று வந்திருக்கின்றன.

எனவே, காந்தியடிகளின் தத்துவங்கள் மக்களை வயப்படுத்தியதிலும், விழைவுகள் செயலாக்கப்பட்டதிலும் அன்றைய நிலையில் புனிதமானதொரு கடமை உணர்வு மேலோங்கி இருந்து வந்திருக்கிறது என்பது பொய்யாகவிருக்க முடியாது.

மேடு எங்கே இருக்கிறதோ அருகே பள்ளமும் இருக்கத்தான் செய்யும். எங்கே வெய்யில் கோரமாகச்

சுட்டெரித்துக் கொண்டிருக்கிறதோ, அருகே தண்ணிய மரநிழலும் இருக்கத்தான் செய்யும். எங்கேவளமை அரசோச்சிக் கொண்டிருக்கிறதோ, அருகே ஏழ்மையும் இருந்து இடர்ப்பட்டுக் கொண்டுதான் இருக்கும். எங்கே அறநெறிகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவோ, அதன் அருகே தீய வழிகளும் ஆட்சி செலுத்திக் கொண்டுதான் இருக்கும் என்பதை மெய்ப்பிப்பதைப் போல்தான், காந்தியடிகளது தூய அறிவுரைகளும், இந்த நாட்டு மக்கள் அனைவரது இதயத்தையும் துல்லியமாக நீவிவிட்டுவிடவில்லை. அன்பு வழிகள் வளர்ந்துகொண்டு வந்த பாதையிலேயே வன்புமுறைகளும் ஏனோ வளர்ந்துகொண்டு வந்துவிட்டன!

காந்தியடிகளது நூற்றாண்டு விழா நினைவாக நாடெங்கும் எடுக்கப்படுகின்ற விழாக் கோலங்களில், காந்தியடிகளது தத்துவ போதனைகள், இன்றைய தலைமுறையினரால் தாராளமான அளவுக்கு மேடையதிர எடுத்துக் காட்டப்படும்.

சுதந்திரத்தின் பெருமை பற்றி, சுதந்திரமற்று இருப்போர்கூட, மேடையேறி வந்து பலபடப் பாராட்டிப் பேசுவார்கள்!

காந்தியடிகளது கருத்துப்படி, இந்த நாட்டு ஏழை எளிய, பாட்டாளி மக்களுக்கும், பட்டினிப் பட்டாளங்களுக்குமே சுதந்திரம் சொந்தமென்று சூடாகப் பேசி 'கரவொலி' பெற்றுப் போவோரும் உண்டு!

வந்த சுதந்திரம் வாழ்வு தந்ததா?
தந்த வாழ்வில் இன்பம் உள்ளதா?

என்று கேட்டால் முகஞ்சுளித்துப் போவார்கள். என்றாலும் அன்னோர் சுதந்திரப் பெருமை பேசி, அதைப் பெற்றுத்தந்த காந்தியடிகள் பெயரைச் சொல்லி ஒரு 'வாழ்க' போட்டு, போடச் சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள்!

இத்துடன் விழா முடிவுற்று விடுகிறதா? காந்தியடிகள் வாழ்க' என்று ஒலிமுழக்கி, முழக்கத்தை விண் எட்டக்காட்டிவிட்டால் மட்டும் போதுமா? காந்தியடிகளது நினைவு நெஞ்சிலே நின்று விடுமா?

காந்தியடிகள் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார்.

'தீண்டாமை ஒழிக!' என்று மேடையேறி நின்று குரல் கொடுப்போம்! தீண்டாமை ஒழிந்துபோகுமா? ஒழிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னென்ன?

காந்தியடிகள் மதுக்குடியை ஒழிக்கப் பாடுபட்டார்

காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடிக் களிக்கின்ற எத்தனை மாநிலங்களில் இன்று மதுவிலக்கு அமுலில் இருக்கின்றன? ஒரு மாநிலத்தில் காந்தியடிகள் பிறந்த நாளிலேயே மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்டதே! எத்தனைப் பேர் மது அருந்திவிட்டுவந்து மேடையேறி காந்தியடிகளது பெருமையை நாவார காதாரப் பேசுகிறார்கள்! 'அவர் குடிகாரர்! காங்கிரசில் இருக்கக் கூடாது' என்று வழக்குகூட நடைபெற்றதே!

காந்தியடிகள் அகிம்சை வழியைப் பரப்பப் பாடுபட்டார்!

எத்தனைப் பேர் இன்றைக்கு இந்த வழியில் நம்பிக்கைக் கொண்டு தங்களை வழிநடத்திக் கொள்கின்றனர். அரசியல் முனையிலிருந்து அங்காடி முனைவரையில் எத்தனைப் பேர் அகிம்சைத் தத்துவத்துக்கு இடமளிக்கின்றனர்! துப்பாக்கிக் குழலிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்ற மா சே துங்கின் தத்துவமல்லவா எங்கும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது!

காந்தி வழி நடப்போம் என்ற சொற்றொடர் உச்சரிப்புக்கு இனிமையாக இருக்கிறது. நடந்து காட்டுவோர் எத்தனைப் பேர்?

இன்று காந்தியடிகள் உயிரோடுஇருந்தால் இந்திய அரசியலில் அவர் என்னென்ன மாற்றம் செய்ய விரும்புவார் என்று அவரே கூறுவதாக மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் ஒரு கற்பனை உரையாடலை 'சுயராஜ்யா' என்ற அவரது இதழில் சித்திரித்துள்ளார்கள்.

நாட்டின் பொருளாதார நிலை, 'இன்சால்வெண்ட்' ஆகும் நிலையிலிருப்பதை எடுத்துக்காட்டியும், இந்தியத் துணைக்கண்டத்து மக்களையே எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும் அளவுக்கு கடமை உணர்வு குன்றி, உரிமை முழக்கம் மேலோங்கி இருப்பதனைத் தெளிவுபடுத்தியும், மொழி விவகாரத்தின் மூர்க்கத்தனமான போக்கு பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது அக்கட்டுரையில்.

நாட்டின் உண்மையான நிலையும் அதுதான்! ஆனால் காந்தியடிகள் உயிர் மீண்டு வரும் அற்புதம் நிகழ முடியும் என்றால்தான், காந்தியடிகளது அந்த அற்புத எண்ணங்களும் இந்த நாட்டில் இனி கால் கோல முடியும்!

நாட்டின் இப்படிப்பட்டவொரு பொதுவான நிலையில்தான் தொடக்கத்தில் கூறப்பட்ட சிறப்புக்களுக்குரிய காந்தியடிகளது நூற்றாண்டு விழா நினைவாக இந்த ஆண்டு கோலாகலங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

காந்தியடிகளது தத்துவங்கள், காங்கிரசுக்காரர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று யாரும் கருதத் தேவையில்லை. காங்கிரசுக்காரர் என்று எண்ணிக் கொண்டிருப்போர் உட்பட.

நாட்டின் எதிர்காலம் நிர்மலமான — தெளிவான நீரோட்டம்போல் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறவர்கள் மட்டுமல்ல—நாட்டு மக்கள் அனைவருமே அவரது போதனைகளின்படி நடந்து காட்டுவது ஒன்றுதான் எதிர்காலத்துக்கு நல்லது என்பது மட்டும் அல்ல —காந்தியடிகளை நினைவு கூர்கிறோம் என்பதற்கும் பொருளாக விருக்க முடியும்.

"மகான்கள். மாவீரர்கள் ஆகியோரின் பிறந்த நாட்களைக் கொண்டாடும் கவர்ச்சி மிகுந்த நாடு நம்நாடு. புகழ்பாடுவதில், பூஜைகள் நடாத்துவதில் வல்லவர்கள் நாம். ஆனால் யாருக்காகத் திருநாள் நடத்துகின்றோமோ, எவருடைய ஆற்றல் பற்றிப் புகழ்ந்து பேசுகிறோமோ, அவர்கள் காட்டிய நெறியிலே நடக்கின்றோமோ என்றால், "இல்லை" என்ற பதிலையே ஏக்கத்துடன் பெற முடிகிறது"

என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கடந்த ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாள் விழாச் செய்தியாக வானொலி மூலம் எடுத்துக் காட்டினார்கள்.

அந்த நிலை இன்னமும் மாறிவிடவில்லை. அந்த நிலைமையை மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படத் தக்க நடவடிக்கைகளை ஊக்குவிக்கத் தக்கதாக இந்த விழா நாட்கள் அமையப்பெறுமானால் மட்டுமே விழாவினால் பெருமையும், விழாவிற்குப் பொருளும் இருக்க முடியும்.

★

இன்று ராட்டை சுழலு
கிறது–நாளை? எத்தனை பேர்?
இன்று சேரிகளிலே சென்று
சேவை செய்கிறோம்–நாளை?
இன்று வகுப்பு ஒற்றுமை
பற்றிப் பேசுகிறோம். எழுச்சி
யுடன்—நாளை? இன்று கிரா
மங்களிலேதான் நாட்டின்
இதயம் இருக்கிறது என்று
உணர்ந்து பேசுகிறோம்;
ஆனால் மறுநாள்?
–அறிஞர் அண்ணா

காந்தி வழி நடப்போம்

திரைகடல்

—இறைவன்

கார்தட்டிப் பெரும்பஞ்சம் வந்த போதும்
கரஞ்சிவக்கத் தரும்வள்ளல்! கதவை வந்து
யார்தட்டிக் கேட்டாலும் இல்லை யென்று
இயம்பாத சொல்மறவன்! 'வள்ளல்' என்று
பேர்தட்டிக் கொள்வதற்குப் பொன்னை வாரி
பெருந்தட்டில் ஈகின்ற சீதக் காதி
நீர்தட்டிக் கூத்தாடும் கடற்க ரையில்
நின்றிருந்தான் அலைகடலைப் பார்த்துக் கொண்டே!

இடிக்கின்ற காலத்தில் உரலை விட்டு
இரைகின்ற தானியம்போல்; கரையின் மீது
அடிக்கின்ற வேகத்தில் நீரைச் சிந்தும்
அலைகரங்கள் அடிவருட நின்றி ருந்தான்!
பிடிக்கின்ற விளையாட்டை அலைகள் ஆட
பித்தன்போல் பார்த்திருந்த அவனின் பக்கம்
துடிக்கின்ற வறுமையினை வாழ்நா ளெல்லாம்
துணையாகக் கொண்டஒரு புலவன் வந்தான்!

திசைதிருப்பிப் பார்த்திட்ட சீதக் காதி
சிரித்தபடி வந்தவனைப் பார்த்து "மண்ணில்
இசைதிருப்பி வசைபெற்ற மன்னன் போன்று
இரங்குமுகம் கொண்டவனே! யார்நீ?" என்றான்!
"அசைதிருப்பி சொல்பரப்பி தளையைக் கூட்டி
அடியெடுத்துப் பாப்பாடும் புலவன்! துன்பக்
கசைதிருப்பும் அடிதாங்க சக்தி யின்றி
கருணைபெற உம்மிடத்தில் ஓடி வந்தேன்!"

"'எடுக்காசை!' எனமிரட்டும் திருடர்க் கன்றி
எவருக்கும் எப்பொழுதும் தன்னு டைய
மடிக்காசை அவிழ்க்காதார் இடையில் காசை
மரக்காலால் அளப்பவனே! உன்பால் நானும்
பிடிக்காசைக் கேட்கவர வில்லை! பாடல்
பெருமையினை அறிந்தவர்கள் என்பாட் டுக்குப்
படிக்காசை அளப்பார்கள்! அதனால் நானும்
'படிக்காசு' எனும்பெயரைப் பெற்றேன்!" என்றான்!

படிக்காசைக் கண்டவுடன் ஆசை யோடு
பாய்ந்தவனைப் போயணைத்த சீதக் காதி,
"படிக்காசைக் கேட்டவனே! உனது பேரைப்
பார்புகழக் கேள்வியுற்று உன்னைக் காணும்
படிக்காசை நான்கொண்டேன்! இன்று கண்டேன்!
பாட்டுக்கு நீபோதும் போதும் என்னும்
படிக்காசை அளிக்கின்றேன் பெறுவாய்!" என்றான்!
பாவலரோ பெருமிதத்தால் விம்மிச் சொன்னான்!

நாய்மொழியோ! நரிமொழியோ! பதவி தந்தால்
நல்லமொழி என்றதனை ஏற்று; பெற்றத்
தாய்மொழியை அழிக்கின்ற கயவ ரெல்லாம்
தமிழரென வாழ்கின்ற நாட்டில், உந்தன்
வாய்மொழியோ உருதுமொழி! இருந்தும் கூட
வண்டமிழைப் போற்றுகின்றாய்! புலவர் கூட்டம்
தேய்ந்தழிந்து போகாமல் திரைகடல் மேல்
சென்றுபொருள் சேர்த்துத்த ருகின்றாய் என்றான்

திரைகடலென் றுரைத்தவுடன் சீதக் காதி
"திரையென்றால் பொருளென்ன?" என்று கேட்டான்!
"திரையென்றால் அலைக ளெ"ன்று புலவன் சொல்ல
"செப்புவதேன் அலைகளினைத் திரைகள் என்று?
உரை!"என்றான் பெரும்வள்ளல்! வயதும் ஆனால்
உடல்மீது சுருக்கங்கள் தோன்றும்! அஃதைத்
திரையென்பார்! கடல்மீது சுருக்கம் போன்று
தெரிவதினால் அலைகளினைத் திரைகள் என்றார்!"

"சிற்றரசர் செலுத்துகின்ற வரிப்ப ணத்தைத்
திரையென்று சொல்வார்கள்! வணங்கி விட்டுக்
கொற்றவன்முன் வரிதன்னைச் செலுத்து கின்ற
குறுநிலத்து மன்னர்போல்; கடல்வ ணங்கி
வெற்றுமணல் கரைமுன்னால் கப்பம் போன்று
வெள்ளலையைச் செலுத்துவதால் அலைகள்தன்னைக்
கற்றவர்கள் திரையென்றார்! இன்னும் கூடக்
காரணமாய் வேறொன்றைச் சொல்வார்!" என்றான்

மரைக்காயர் வழிவந்த சீதக் காதி
"மற்றுமொரு பொருளுண்டா? என்ன?" என்றான்
"திரையென்றால் 'மறைப்பு'என்ற பொருளும் உண்டு!
செம்பவளம்; வெண்சங்கு; இரத்தி னங்கள்;
புரைதீர்ந்த நன்முத்து இவைகள் எல்லாம்
புதைத்திருக்கும் அடிப்பரப்பை மறைத்துக்கொள்ளும்
திரைபோன்று இருப்பதினால் அலைகள் தன்னைத்
திரையென்று சொல்வார்கள்!" என்று சொன்னான்!

"கல்விளக்கம் செய்துசிலை யமைக்கும் சிற்பக்
கலைஞன்போல் 'திரை'பொருளை அறியக் காட்டிச்
சொல்விளக்கம் தந்திட்டாய்! இதுபோல் உன்னைத்
தொடர்ந்துதமிழ்க் கவிஞரெல்லாம்சொல்லை ஆய்ந்து
நல்விளக்கம் தரவேண்டும்!" என்றான்! பின்னர்
நானூறு படிக்காசை அளந்து; சம்பா
நெல்அளந்து பொன்அளந்து அனுப்பி வைத்தான்!
நிறைவான நெஞ்சோடு புலவன் சென்றான்!

காந்தி நூற்றாண்டு விழா நினைவுக்கு...

முக்கியத்துவம் தேவை!

"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ணவேண்டும். அதன் அமைப்பில் ளுக்கு முழு அதிகாரமும் முக்கியத்துவமுமிருக்கிறது என்று அவர்கள் நினைக்கவேண்டும். களில் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்பதே இருக்கக்கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்னியோன்னியமாய் வாழவேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடு படுவேன்"

—காந்தியடிகள்.

வலியார்முன் தன்னை

செ. சுப்ரமணியன்.

வலிய வயமாவின் முன்னால் ஈடு கொடுக்க முடியாமல் களைத்து நின்றாலும், அந்தக் கொடுவரி அயராமல் சண்டையிட்டுக்கொண்டு தான் இருக்கிறது. இரண்டு பெரும் விலங்குகளின் அந்த அதி பயங்கரத் தாக்குதல் அந்தப் பெருங் காட்டையே அமளிதுமளியாக்கிக் கொண்டிருக்கிறது. யானையின் பயங்கரமான பிளிறலும், பாய்மாவின் உறுமலும் உலுக்கிக்கொண்டிருக்கும் அந்தவேளையில், மற்ற வன விலங்குகளுக்கு அந்த இடத்தில் வேலை...? வெகு தொலைவில் சென்று ஒதுங்கிவிட்டன அவை!

காலம் கரைந்துகொண்டிருந்தது. நெடுநேரப் போராட்டத்திற்குப் பின் புலி பின் வாங்குகிறது. பதுங்கி மறைகிறது பக்கத்திலிருந்த புதரில். பின் விரைவாக ஓடுகிறது.

ஓடிக் கொண்டிருந்த அந்தப் புலி சட்டென அசையாமல் நிற்கிறது! அருகில் ஒரு மரத்தின்மேல் இருக்கும், ஒரு வேடனை அது கண்டு கொண்டுவிட்டது. அவன் மேல் பாய அது பதுங்குகிறது. வேடனின் விழிகள் என்ன, வயமாவின் விழிகளுக்குச் சளைத்ததா? வேடனின் வில்லிலிருந்து விடுபட்டுச் சீறிப் பாய்கின்ற கணையின் குறி தவறுகிறது. கணையினும் கடுகிப்பாய்கின்ற புலியின் தாக்குதலுக்குத் தப்பி அதோ வேறோர் மரத்தின் இடுக்கினில் பதுங்கிவிட்டானே அவன்! புலி போய்விட்டது. அவனும் தன் புகலிடத்திற்குப் புறப்பட்டுவிட்டான்.

வேகமாக நடக்கத் தொடங்கிய வேடன் என்னவோ கூறுகிறானே...!

"ஆகா! சரியாக அகப்பட்டுக் கொண்டது அந்தக் காட்டேரிப் பயலின் நாய். என் அருமை நாயைக் கொன்றதல்லவா அது...பழிக்குப் பழி" கணை தொடுப்பதற்குள் நாய் கடுகி விரைந்து விட்டதே...!

அதோ! வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு பூனையை அல்லவா அது துரத்திக்கொண்டிருக்கிறது. கீழேயே ஓடிய பூனை ஒரு கிளையின் உச்சியில் அல்லவா உட்கார்ந்து விட்டது. பூனைக்குக் கேலி, பாசிக்கு எரிச்சல், பூனை இறங்குவதாகத் தெரியவில்லை. பாசி திரும்புகிறது. அயர்வுடன் நடக்கிறது.

பூனை கிளைக்குக் கிளை தாவுகிறது. வளை தோண்டும் ஓர் வெள்ளெலியைக் காண்கிறது. விருப்புடன் பார்க்கிறது. அதன் வாயில் எச்சில் வழிகிறது. தற்செயலாகத் திரும்பிப் பார்த்த எலி பூனையைக் கண்டதும் நிற்குமா? புதரில் பாய்ந்து ஓடுகிறது. அருகில் இருந்த ஒரு வளையில் புகுந்துகொள்கிறது.

எலி உள்ளே நுழைந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு ஆட்டிடையன் வேட்டியை வரிந்து கட்டுகிறான். மண் வெட்டியை எடுக்கிறான். வெட்டத் தொடங்குகிறான் வளையை. அதோ இன்னொரு நோஞ்சான் இடையன் வந்துவிட்டான். தன் தலை வேட்டியை எடுக்கிறான். எலி வரப்போகும் வளையில் அதை வைத்து மூடிக்கொள்கிறான்.

"டேய்......முதலில் தோண்டியவன் மண்வெட்டியை வீசியெறிந்து விட்டு எழுகிறான். "நானே பிடிச்சுக்குவேன் போடா. பங்கு போட வந்துட்டியா பங்கு. நீ என்னோடே சேரவும் வேணும். எலியில் பங்கு கேக்கவும் வேணும். போடா...... அந்தாலே."

ஒற்றை நாடியிடம் அந்தக் கட்டமைந்த இடையனின் உறுமல் ஒன்றும் பலிக்கவில்லை. அவன் அகலுவதாகக் காணோம். அவன் மேல் அந்த முதல் இடையன் சீறிப் பாய்ந்தபோதோ பிடிக்கு நழுவிப் பின்வாங்குகிறான். ஓடுகிறான். பிடரியில் குதிக்கால் பாவ, எலி சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது அதோ.

ஓடிக்கொண்டிருக்கும் இடையன் அதோ தன் இல்லத்தில் நுழைகிறான். அவனது அன்புச் செல்வம், அறக் கதிர் ஈன்ற அழகு மழலை அவன் கால்களைக் கட்டிக்கொள்ள ஆவலுடன் வருகிறது. கட்டிப் பிடிக்க எண்ணிய அந்தக் கால்கள் எட்டி உதைக்கின்றதே. அலறலுடன் நிலத்தில் விழுந்த குழந்தை கதறுகிறது. புரள்கிறது.

நிலமகள் அவனைப் பொறுமையுடன் அணைத்துக் கொள்கிறாள். அவள் தம் கனியிதழ்களில் குழவியின் 'குறு குறு' விழிமுகம் புதைந்து கிடக்கிறது, ஆதரவுடனும் ஆதுரத்துடனும் அவள் தம் செவ்விதழ்கள் நெகிழ்கின்றன. சொல்லென்னும் நன்முத்துக்களைச் சிந்துகின்றன. என்னவென்று நாமும் அருகில் சென்று கேட்போமே.

"அழாதே குழந்தாய் அழாதே. உன்மீது உன் தந்தையின் சீற்றம் பாயவில்லை. வலியுள்ள ஒரு வயமாவின் முன் வலியிழந்த ஒரு வல்லியத்தின் ஆற்றாமை மிக்க ... சினத்தின் வடிவம் அது. அது தொடர்ந்தவிதம் நானறிவேன்.

வலியுள்ள ஓர் உயிரினம் வலியற்ற உயிரினங்களைத் தாக்குவதும் அவ்வாறு பின்வாங்கிய உயிரினங்கள் ஆற்றாமையைத் தன் வலியினைத் தன்னிலும் வலியற்ற உயிரினங்கள்மீது காட்டுவதும், நான் நாளும் கண்டு வருகின்ற நாடகக் காட்சிகள் தான்.

என் மடியினில் உன்னைப்போல் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து இப்போது தரணியெங்கும் தாங்கிடாப் புகழுடம்பெய்தி நிற்கும் வான்புகழ் வள்ளுவன் அன்று கூறிய மெய்

(10-ம் பக்கம் பார்க்க)

காந்தி நூற்றாண்டு விழா நினைவுக்கு...

சகித்துக்கொள்!

உண்மையான ஜனநாயக உணர்வை நாம் வளர்க்க விரும்பினால், சகிப்புத்தன்மை இல்லாமல் அதை நிறைவேற்ற முடியாது.

—காந்தியடிகள்.

அவளும் பெண்தானே

ஜே.வி. நாதன்

வானத்துக் கன்னியின் நிர்மலமான நெற்றியில் ஒளிரும் திலகமாய் வட்ட நிலா பாலாகப் பொழிந்துகொண்டிருந்தது. இதமான தென்றல் இன்பக் கிளுகிளுப்பூட்டிற்று. என் இந்த நேரத்து உள்ளத்தின் உணர்ச்சிகள் இருக்கின்றனவே, அவைகளுக்குத்தான் எத்தனை கொடுமை!

வசந்தி என் மனக்கண்ணில் நிழலாடுகிறாள். சிங்காரச் சித்திரமாய், சிரிக்கும் எழில் பெட்டகமாய் கூவும் குயிலாய், குளிர் அருவியாய், வீசும் தென்றலாய், வீணையின் நாதமாய் வசந்தியின் பொன்னெழில் பளிச்சிடுகிறது. உடல் முழுவதும் அவள் நினைவால் பற்றி எரிகிறது. பெருமூச்சு விட்டுக்கொண்டு இனியும் சும்மா இருக்க என்னால் இயலவில்லை. பேசும் தென்றலும், பேசா நிலவும் என்னைப் பைத்தியம் பிடிக்க வைத்துவிடும்போலிருந்தது.

சற்றுமுன் பார்த்துவிட்டு வந்தேனே ஒரு ஆங்கிலத்திரைப்படம், பெயர். '...பை நைட்!' அரைகுறை ஆடைகள், ஆபாச நடனங்கள், இறுக்கமான தழுவல்கள்! என் மனத்தில் இப்படி ஒரு தாகத்தைக் கிளப்பிவிட்டது அந்தப் படத்தின் மோசமான காட்சிகளா? அல்லது இந்த நிலவா? வசந்தியைப்பற்றி நேற்று நான் புதிதாக அறிந்துகொண்ட அந்த....அந்த....பயங்கரமான உண்மையா?

தெரு நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தது. ஊரே அமைதியாகத் துயின்றுகொண்டிருக்கும், நள்ளிரவு நேரம். நான் மட்டும் வசந்தியின் வீடு நோக்கி நடக்கிறேன். "வசந்தி! வசந்தி!" என் உள்ளம் ஓயாமல் அவள் பெயரைக் கூறிப் புலம்புகிறது. இன்னும் சிறிது நேரத்தில் அவள் பொன்னுடல் என் பிடிக்குள் சிக்கி இன்பமளிக்கப் போகிறது...... இன்பத்தின் எல்லையை சில விநாடிகளுக்குள் நான் எட்டப்போகிறேன் என்ற நினைப்பு என் கால்களுக்கு இன்னும் விரைவைக் கொடுத்தது.

'வீனஸ் பார்' என்று நியான் விளக்கு பளபளத்து ஒருகணம் என்னை அழைத்தது. தயங்கினேன். பர்சில் பிதுங்கிக்கொண்டிருந்த கற்றை கற்றையான பண நோட்டுகளில் ஒன்றிரண்டை இழுத்து வீசினேன். 'பாட்டில்' வந்தது. அங்கிருந்து வெளியே வந்தபோது என் உள்ளத்தில் வசந்தியின் நினைவுப் போதையோடு மதுவின் போதையும் சேர்ந்திருந்தது.

• • •

கண்டதும் காதல், காணுமுன்பே காதல், கல்லூரிக் காதல், கார் விபத்துக் காதல்......

இவைகளில் என் காதல் எந்த வகை தெரியுமா? தயவுசெய்து சிரிக்காதீர்கள்... கண்டதும் காதல்! ஆம்; நான் வசந்தியைக் கண்ட அக்கணமே மனம் பறிகொடுத்தேன். அம்பிகையின் சந்நிதி, தீபச்சுடர் ஒளியில் புவனேஸ்வரி பளீரென்று ஒளிர்ந்து காட்சியளித்தாள். மனமுருகத் தொழுதுவிட்டுத் தலை நிமிர்ந்தேன்—எதிரேயும் ஒரு அம்பிகையா?...கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்த்தேன், மானிடப் பெண்தானா, அவள்!

செந்தீ கொழுந்துவிட்டெரிவது போன்ற பேரழகு; தீயின் வெம்மையை மட்டும் காணோம், மாறாக, புனலின் குளிர்ச்சியும், வசந்தத்தின் தென்றலும் பளிச்சிட்டன. இருவரது விழிகளும் ஒருகணம் மோதின அப்போது என் உடல்—மனம் இரண்டுமே அதிர்ந்தன. இப்படியும் ஒரு அழகி இருக்க முடியும்? 'என் கண்களே! இத்தனை நாட்கள் பட்டினி போட்டதற்காக என்னை மன்னித்துவிடு!' என்று கூறிக்கொள்கிறேன்.

அவள் வைத்தகண் வாங்காமல் என்னையே வெறித்து நோக்குகிறாள். எனக்குப் புரியவில்லை. அந்த தீட்சண்யத்தை — விழிப்பார்வையின் கூர்மையை என்னால் தாளமுடியாது தலை குனிந்தேன். பெருமை பிடி'டவில்லை, என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அவள் நடந்தாள். கடைசியாக, அவள் என் பார்வையிலிருந்து மறையும் சமயம், என்னை நோக்கி இதழ் மலர்ந்தாற் போலிருந்தது. ஓ!...... அந்தச் சிரிப்பில்தான் எத்தனை குளிர்ச்சி!

கோவிலைவிட்டு வெளியேறி அவளைத் தேடினேன், நிலவுபோல வந்தவள் மின்னல்போல மறைந்துவிட்டாளா? அவள் போனஇடம் தெரியவில்லை.

வானம் 'டம டம' வென முழங்கியது. பளீர் பளீரென்று மின்னல் வெட்டியது, சோ' வென்ற பேரிரைச்சலுடன் மழை கொட்டத் தொடங்கியது, ஒதுங்க இடம் தேடி விரைவாக நடந்தேன்.

"யாரது? அங்கே நிற்பது?" என்று ஒரு குரல் மழைக்காக நான் ஒதுங்கிய பங்களாவிலிருந்து கேட்டது. அதைத் தொடர்ந்து பளிச்சென்று மின் விளக்கு எரிந்தது. கதவும் திறக்கப்பட்டது. "மழை!...... நின்றதும் போய்விடுவேன்........" என்று கூறியபடியே நிமிர்ந்தேன். தூக்கி வாரிப்போட்டது எனக்கு. கதவைப் பிடித்தபடி ஒயிலாக நின்று புன்முறுவல் வீசியபடி காட்சியளித்தவள்—

சந்தேகமில்லாமல் அவளேதான்! கோவிலிலே சற்றுமுன்பு கண்டு பிரமித்து நின்றேனே அதே அழகிதான்! இனி அவளை எங்கே சந்திக்கப் போகிறோம்; 'பளிச்'செனமின்னி அக்கணமே மறைந்துவிடும் மின்னல் போன்றவள் அவள், என்று எண்ணியவனுக்கு, மீண்டும் அவள் தென்படுவாள் என்ற நம்பிக்கை சிறிதும் இல்லாதிருந்தவனுக்கு, இந்த எதிர்பாராத சந்திப்பு பாலைநிலத்துக் குளிர் மழையாய் பசுமை தந்தது.

"நீங்களா? உள்ளே வந்து உட்காருங்கள்!"

நான் விழித்தேன். மிகவும் உரிமை பாராட்டுகிறாளே...!

குளிருக்கு இதமாக சூடான

தேனீர் கொண்டுவந்து கொடுத்தாள் மறுக்காமல்பருகினேன். பேச்சு தொடங்கியது. ''என் பெயர் முகிலன். ராவ்பகதூர் ரங்கசாமிப் பிள்ளை என்று கேள்விப்பட்டிருப்பீர்களே. பெரிய லட்சாதிபதி!......அவருடைய ஒரே பையன் நான்!''

''ஓ!''—வியப்புடன் பார்த்தாள் அவள். பின் கூறினாள்; ''என் பெயர் வசந்தி! இதைத் தவிர வேறு எதையும் கூறும் நிலையில் நான் இல்லை. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், மிஸ்டர் முகிலன்!'' குரலில் ஒருவித சோகம் இழையோடிற்று.

வசந்தி என்னை வெறிகொண்டவள்போல உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். ஏன் இந்த வெறிகொண்ட பார்வை?...கடித்து விழுங்கிவிட எண்ணமிடுகிறளோ?

மழை நின்றுவிட்டது. எழுந்தேன் ''மிஸ்டர் முகிலன்! ஓர் வேண்டுகோள்...'' தயக்கத்துடன் கூறியபடியே வசந்தியும் எழுந்தாள். ''முடிந்தால் — தயவுசெய்து தினம் ஒரு முறையாவது என் வீட்டுக்கு வருவீர்களா?........''—கெஞ்சினாள் அவள். அவள் கண்களில் அப்போது பொங்கிய புத்தொளி; அதில் தெரிந்த ஏக்கத்தின் நிழல்...!

''நிச்சயம் வருகிறேன், மிஸ் வசந்தி!''என்று கூறிவிட்டுக்கிளம்பினேன். இருளில், தெரு முனையில் திரும்பிப் பார்த்தபோது, பங்களா முகப்பு விளக்கின் ஒளியில் அசையாத பதுமையென வசந்தி நின்று நான் வந்த திசையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த காட்சி தெரிந்தது.

* * *

இரவுகள் எத்தனையோ ஏக்கப் பெருமூச்சில் கழிந்தன. சூரியன் உதிக்கத் தவறினாலும் தவறலாம், நான் வசந்தியின் இல்லத்திற்குச் செல்வதும், உரையாடிப் பொழுதைக் கழிப்பதும் தவருது. பொதுவான கருத்துக்களை. இலக்கிய விஷயங்களைப் பற்றியே வசந்தி பேசினாள். அவள் ஒரு புதிர்...என்னைப் பொறுத்த வரையில்!

பசித்திருப்பவன் முன்னே பால் சோற்றை வைத்துவிட்டு ''தின்னமல் பார்த்துக் கொண்டேயிரு!'' என்று கட்டளையிட்டால்...? ஆமாம் நான் பசிவெறியில் இருப்பவன்! பால்சோறு — வசந்தி! — பசியைப் போக்கிக் கொள்வதில் தவறென்ன? —இப்படி என் மனம் சிந்திக்கும் வேளையில், தேவையில்லாத விஷயங்களை, வேலையில்லாமல் பேசுகிறளே பைத்தியக்காரி!......எனக்கு வேண்டியது அவளுடைய வறட்டு வேதாந்தங்களா?......வாழ்வின் தத்துவமா?...இல்லையே? அவளுடைய தளதளத்த எழில்மேனியல்லவா எனக்குத் தேவை!

தீயை வீசினான் நண்பன் அரசு· வசந்தியைப் பற்றி அப்படி ஒரு செய்தியை நண்பன் கூறியபோது......ஓ! அதுதான் எத்தனை பயங்கரமான உண்மை!...திடுக்கிடும் அத்தகவலை என்னால் நம்பவே முடியவில்லை.

வசந்தி ஒரு வேசியாம்!

புதிய செய்தியை நண்பன் தெரிவித்தபோது என் வெறிகொண்ட மனத்தில் எழுந்த உணர்ச்சி வேகம்...!

அவளுடைய எழில் கொஞ்சம் மேனியை என் கோரப் பசிக்கு விருந்தாக்கிக்கொள்ளும் வேகம் அதிகரித்தது. அவள் எப்போதும் என்னை வெறிக்க வெறிக்கப் பார்ப்பாளே. அந்தப் பார்வை; ''தினம் தவருமல் வாருங்கள்'' என்று அழைப்பு விடுத்தாளே. அந்தக் குரலில் தொனித்த ஏக்கம் இவைகள் என் மன அலைகளை பொங்கியெழச் செய்தன. இத்துடன் கோல நிலவும், குளிர்த் தென்றலும்,—பார்த்த '...பைநைட்' படமும், பருகிய மதுவும் என்னை ஒரு வெறியனாகவே மாற்றிவிட்டன.

இதோ, வசந்தியின் பங்களா வந்துவிட்டது! இருட்டில் பூதாகாரமான அரக்கனாய் உயர்ந்து நின்ற மரங்கள்...! வாசலருகில் வந்து நின்றேன். இதே இடத்தில்தான் மழைக்காக ஒதுங்கி முதன் முதலில் வசந்தியைச் சந்தித்தேன்!

மதிலேறித் திருடன்போல் சத்தமின்றி உள்ளே புகுந்தேன். நேரே வசந்தியின் படுக்கையறையை நோக்கி நடந்தேன். அவள் பளிங்கு முகத்தில், கனிந்த கனியிதழில், கோலச் சிரிப்புதிர்க்கும் குங்குமப்பூக் கன்னத்தில், சங்குக் கழுத்தில், பிறைநிலா ஒளிரும் பிறை நுதலில்— அங்கங்கும் ஒவ்வொரு 'இதழ்ப் பரிசு' தர என் உள்ளம் துடித்தது.

அறையில் விளக்கு எரிந்தது. வசந்தி இன்னும் உறங்கவில்லையா?

காற்றிலே அலைபாய்ந்து கொண்டிருந்த திரைச்சீலையின் பின்னே நின்று எட்டிப் பார்த்தேன். வசந்தி குப்புறப் படுத்துக்கொண்டிருந்தாள். அந்தக் கண் கூசும் எழிலைக் கழுகுக் கண்களால் கொத்திக் குதறிய எனக்கு விம்மி விம்மித் தாழ்ந்த அவளது முதுகும், விசும்பியழும் ஒலியும் வியப்பை அளித்தன. ஏன்? ஏன் வசந்தி இந்த வேளை கெட்ட வேளையில் விம்மி விம்மி அழுகிறாள்?

சற்று எட்டி நன்ருகப் பார்த்தபோது அவள் கைகளில் ஒரு புகைப் படத்தை வைத்துக் கொண்டிருப்பதும், அதைத் தடவிக் கொடுத்தபடி வசந்தி தேம்புவதும் எனக்குப் புலப்பட்டது. இப்போது அந்தப் புகைப்படம் நன்ருகத் தெரிந்தது. அது—

சாட்சாத் என்னுடைய நிழற்படமேதான்!

அது எப்படி அவளுக்குக் கிடைத்தது? எதற்காக அதை வைத்துக் கொண்டு அழுகிருள், இந்தப் பைத்தியக்காரி? எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் ஏதோ புலம்புவது கேட்டது. உற்றுக் கவனித்தேன்.

''முத்து!...என் அருமைத் தம்பீ! ......எங்கேயடா போய்விட்டாய்?

என்னை விட்டுப் பிரிய உனக்கு எப்படியடா மனம் வந்தது?...என்னைக் கொண்டு போயிருக்கலாமே, அந்தப் பாழும் எமன்...ஒரு பாவமும் அறியாத பாலகனை உன்னையா பலிகொள்ள வேண்டும்?..."

"முத்து, என் கண்ணே!" என்று அந்த நிழற்படத்தைப் பரிவுடன் தடவிக் கொடுத்து முத்தம் பதித்தாள் வசந்தி; உணர்ச்சி வேகத்தில் கதறினாள்.

"தம்பீ! உனக்காகத்தானடா, நீ நல்வாழ்வு வாழவேண்டும், ஒரு குறையும் தெரியாமல் வளரவேண்டும். நன்கு படித்துப் பெயரும் புகழும் பெற்றுப்பெருவாழ்வு வாழவேண்டும் என்பதற்காகத்தானேடா, நான் செய்யத்தகாத பாவத்தைப் புரிந்தாவது பொருள் ஈட்டி இன்று வேசி, கேடு கெட்டவள், என்றெல்லாம் பெயர் எடுத்து சமுதாயத்தின்முன் தலைநிமிர்ந்து நிற்கத் திராணியற்றவளாய் ஆனேன், ஆனால் இன்று நீ என்னை விட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டாய். பாழும் உலகில் என்னைத் தனியளாக்கிவிட்டுப் போய் விட்டாயே, தம்பி, என்னை ஏனடா பிரிந்தாய்?..." வசந்தி கதறிக்கொண்டேயிருந்தாள்.

பளீரென்று மின்னலடித்தது என் மூளைக்குள்! வசந்தியின் செய்கைக்கும், புலம்பலுக்கும் காரணம் புரிந்துவிட்டது. வசந்தியை, அவளது பாசத்தின் உயர்வை, அன்பின் சிறப்பை எப்படிப் போற்றுவது என்று புரியாமல் விழித்து நின்றேன்.

"வசந்தி, என்னை மன்னித்துவிடு! என்னிடம் பழகிய போதெல்லாம், என்னை வெறித்து நீ நோக்கிய போதெல்லாம் நீ என்னை விரும்புகிறாய் என்று எண்ணி என்னை நானே ஏமாற்றிக் கொண்டுவிட்டேன், ஆனால் நீ என்னைப்போலவே உருவத்தில் ஒத்திருக்கும் உன் அருமைத் தம்பியை என்னில் கண்டிருக்கிறாய்; என்னைக் காணும்போது, என்னுடன் பேசும்போது, மறைந்துவிட்ட என் தம்பியைக் காண்பதாக, பேசுவதாக நீ நினைத்திருக்கிறாய் என்ற உண்மை எனக்குத் தெரியாமல் போய்விட்டது. உன்னைத் தவறாகப் புரிந்துகொண்டுவிட்ட இந்தப் பாவியை மன்னிப்பாயா, வசந்தி?..." —மனத்தின் புலம்பல்களோடு வந்த வழியே சப்தமின்றித் திரும்பி நடந்தேன்.

விலைமகளுக்கும் உண்டு,கற்பல்ல; பாசம்!

வேசியாக இருந்தால் என்ன?— அவளும் பெண்தானே...!

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

யுரை பெருமை மிக்கது. அவன் இருந்த அவனியில் அன்றாடம் நிகழ்ந்திடும் இந்த அவலக் காட்சியினைக் கண்டான் பாடினான்.

"வலியார் முன்தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து—

என்று மக்களே நீங்கள் மனிதர்களாக வாழுங்கள். மாக்களாகிட வேண்டா. படியுங்கள் நான் பகர்ந்ததை. உணருங்கள் உண்மையினை. ஓர்ந்தறியுங்கள். நடந்து காட்டிடுங்கள். இந்த நானிலம் திருந்தட்டும். நம் பிறவிப் பயன் கிட்டட்டும். என்று சொல்லாமல் சொன்னான் அந்த சொல்லின் செல்வன். செந்தமிழ்த் தாயின் திருப் பெருமகன்.

ஆம்...குழந்தாய்......அவன் வழிகாட்டினான், வழிவந்த மனிதர்களும் அவ்வழியை உணர்கிறார்கள். ஆனால் அவ்வழிவிட்டு, நாச வழியினில் கல்லும், முள்ளும் வனவிலங்குகளும் நிறைந்திட்ட காட்டு வழியினில் செல்கிறார்கள், அதில்தான் சொர்க்கத்தையும் சொகுசான வாழ்வையும் காண்பதாக எண்ணுகிறார்கள். செல்வத்தையும் செல்வாக்கையும் பெறுவதாக நினைக்கிறார்கள். பொலிவையும் வலிவையும் பெறுவதாக மனம் கொள்கிறார்கள். புகழும் பெருமையும் கிட்டி விட்டதாகக் கதைக்கின்றார்கள். அந்தச் சொர்க்கமும், சொகுசான வாழ்வும், செல்வமும், செல்வாக்கும், பொலிவும், வலிவும், புகழும் பெருமையும் பழிபாவம் என்ற அடிக்கல் வழியே பெறுவதை அவர்கள் நினைப்பதில்லை. உணருவதில்லை.

இன்று நீ குழந்தை. தெய்வத்திற்கு ஒப்பானவன். நாளை நீயும் பெரியவனாகிவிட்டால் உன்னையும் அவர்களில் ஒருவனாகத்தானே காணமுடியும்? என்ன செய்வது? என் பிள்ளைகள் வளர வளர அவர்களுடன் கெட்ட மனமும் உடன் வளருகிறதே. என்ன செய்யட்டும்? பொறுமையாக இருக்கின்றேன். இனியும் இருப்பேன். நீ அழாதே கண்ணே.

இதையெல்லாம் புரிந்துகொண்டதைப் போன்று குழந்தை எழுந்து நிற்கிறது. நடக்கிறது தன் தாயை நோக்கி. குழந்தை தாயின் கன்னத்தில் ஓங்கி ஓங்கி அறைகிறது! தாய்மையல்லவா அது! பொறுமையுடனும் பெருமையுடனும் தாங்கிக் கொள்கிறாள் அந்தத் தாய்.

இந்தப் பொறுமை தாய்மையிடம் தான் வரும். மற்றவர்களிடமும் வந்தால் உலகமே உயர்நிலைக்கு வந்துவிடுமே. நிலமங்கை பெருமூச்சு விடுகிறாள். அதைத் தவிர அவளால் என்ன செய்ய இயலும்?

★

காந்தி நூற்றாண்டு விழா நினைவிற்கு...

சுதந்திரம் என்றால்...?

என்னுடைய கனவின்படி ஆன சுயராஜ்யம் அல்லது நம்முடைய கனவின்படியான சுயராஜ்யத்தில் இனமத வேறுபாடுகள் எதுவும் இருக்கமாட்டாது. படித்தவர்களின் ஏகபோக ஆதிக்கமாகவோ, பணக்காரர்களின் ஏகபோக ஆதிக்கமாகவோ அது இராது.

சுயராஜ்யம் என்பது விவசாயி உட்பட அனைவருக்கும் சொந்தமானதாக இருக்கவேண்டும். குறிப்பாக உடல் ஊன முற்றோருக்கும், உடலுழைப்பு நல்கியும்கூட பட்டினிகிடக்கும் நிலையிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கும் அது சொந்தமானதாக இருக்கவேண்டும்,

—காந்தியடிகள்.

காஞ்சி

4-ம் ஆண்டு மலர்

வந்தால்-தந்தால்-தருவேன்!
(அமைச்சர் மா. முத்துசாமி)

அரிமா நோக்கு!
(என். வி. நடராசன்)

விரலுக்குத் தக்க வீக்கம்!
(மா. கி. தசரதன்)

எனது பயணம்!
(அரங்கண்ணல்)

மெய்யறிவு!
(அ. மு. பரமசிவானந்தம்)

இரவு என்ற குருவி!
(சோமு)

ஆகா! ஜப்பான்!
(அண்ணல்)

இரட்டைக் கொலை!
(எஸ். எஸ். தென்னரசு)

பெருங்காட்டு கதை
— தில்லைவில்லாளன், எம். ஏ., எம். பி.

காங்கிரஸ் அகில இந்தியக் கட்சியா?
— எஸ். ஆர்.

முதலான கருத்துக் கருவூலங்களோடு

அறிஞர் அண்ணாவின்
அமெரிக்கப் பயணத்தில்...!

என்ற தலைப்பில் அண்ணாவின் தனிச் செயலாளர்
கு. சொக்கலிங்கம், I.A.S. அவர்களது
புதிய செய்திகளோடுகூடிய சிறப்புக் கட்டுரையும்.

அறிஞர் அண்ணா அவர்கள்

படைக்கும் தீஞ்சுவைக் காப்பியங்கள் பலவோடு

தயாராகிறது!

சமதர்மம்

சமதர்மம் என்றாலே செல்வர் ஏழை
சரிசமமாய் வாழ்விருக்க வேண்டும் ஆனால்
சுமைதூக்கும் தொழிலாளி ஓர்பால் சொத்து
சுகத்தினிலே புரண்டிருப்போர் ஓர்பால் என்றால்
அமைதிக்கு வழியேது? சட்டம் போட்டு
அடக்குவதால் பலனேது? குமுறும் நெஞ்சம்
இமைமூடித் திறப்பதற்குள் வெடித்தி டாதோ?
எவ்வாறு சமதர்மம் அடைதல் வேண்டும்?

நாட்டிலுள்ள சொத்தையெல்லாம் பொதுமை யாக்கி
நாக்காணி முக்காணி பிரித்த ளித்து
தீட்டிவிட்டோம் சமதர்ம திட்டம் என்றால்
தீர்ந்திடுமா? வலுமிக்கோன் மனமி ருந்தால்
காடழித்துப் பயிரிடுவான்; இலையேல் தம்மின்
கைவலியால் எளியாரை மடக்கி வைத்து
ஏடெழுதிக் கொண்டிடுவான் ஏற்றத் தாழ்வு
இல்லாமற் போகாது; இன்னும் சொன்னால்

வாழ்வுமுறை எல்லார்க்கும் ஒன்றா? பிள்ளை
வரம்புண்டா? வகைகெட்ட சாதி போச்சா?
ஊழ்வினையே! என்றிருப்போர் திருந்து வாரா?
உலகறிவு எல்லார்க்கும் ஒத்துப் போமா?
சூழ்நிலைதான் மாறாதோ? சொந்த பந்தம்
சுற்றத்தார் எண்ணிக்கை, உதவி ஒன்றா?
ஆழ்கடலில் முத்தெடுக்க துணிவு வேண்டும்
அதுபோல்தான் அரசியலில் விழிப்பு ணர்ச்சி!

மாபெரிய தொழிற்சாலை அதனைச் சார்ந்த
மற்றசிறு தொழிற்கூடம் அனைத்தும் சர்க்கார்
காபந்து செய்திட்டால் மட்டும் போதா
கைக்கொண்டு நடத்திடுதல் வேண்டும்! அஃது
லாபத்தை ஒருவரிடம் குவியா வண்ணம்
நாட்டுக்கேச் சேர்ப்பதுவாய் அமையும்! இஃதால்
ஆபத்து ஏதுமிலை ஊக்கம் கொண்டு
அனைவோரும் உழைப்பதற்கு ஏது வாகும்!

நகரத்திற் குள்ளேயே அனைத்தும் என்ற
நச்சுக்கொள் கைமாற்றி அமைதி வாழ்வின்
சிகரமெனப் போற்றுகின்ற கிராமத் திற்குள்
சிறுதொழில்கள் அமைத்திடுதல் வேண்டும்; அஃது
நகரத்தில் குடியேறும் மக்கள் கூட்டம்
நாளடைவில் குறைந்துவிட வழிவ குத்து
வகையாக உற்பத்திப் பெருகும் வேலை
இல்லாத திண்டாட்டம் நீக்கிக் காட்டும்!

உழைப்பவர்க்கே நிலஞ்சொந்தம் என்று சொன்னால்
உணவுக்குப் பஞ்சமுண்டா? வலிமை இல்லார்
பிழைப்புக்குச் சிறுதொழில்கள் உதவும் இங்கு
பிச்சைப்பாத் திரமேந்தி திரிவோர் நாளும்
நகைப்புக்கு ஆளாகி மறைந்து போவர்:
நல்லவர்கள் வல்லவர்கள் மிகுந்து காண்பர்
குகைவாயில் வழிசொல்லி விட்டு விட்டேன்
கொண்டுவர இயலாதோ சோச லீசம்?

—சாந்தி

நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ்

வறுமையும் வாழ வழியில்லா நிலைமையும், கவலையும் கடன் தொல்லையு நிறைந்த ஒரு ஏழைக் குடும்பத்தில் இரண்டாம் குழந்தையாக அவன் அவதரித்தான். கைல்ஸ் என்ற கிறிஸ்துவப் பாதிரியாரின் உதவியால் கல்விகற்ற அவன் தன் பதிஞேராவது வயதிலேயே குடும்பப் பாரத்தை சுமக்க வேண்டியதாயிற்று. இருள் மண்டி அழுக்கேறிய ஒரு பழைய தொழிற்சாலையில் வாரத்திற்கு ஆறு ஷில்லிங் மட்டுமே சம்பளமாகப் பெற்றுவந்த தன் நிலைமையை எண்ணிஎண்ணி மனதில் அந்தரங்கமாக வேதனைப்பட்டான் அவன். அதன் பின் பல வருடங்கள் வரை தன் வேலையைப்பற்றிப் பேசவே வெட்கம் கொண்டிருந்த அவன்தான், பிறகு எக்காலத்திலும் மக்களால் மிக விரும்பி பேசப்படும் ஒரு சிறந்த நாவலாசிரியராய் விளங்கினுன். சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்ற தன் பெயரை இலக்கிய உலகில் என்றென்றும் நிலைபெறச் செய்துவிட்டான்.

1812-ஆம் ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதியன்று போர்ட்ஸ்மௌத் நகர எல்லையிலிருக்கும் போர்ட்ஸீ என்ற ஊரில் பிறந்த சார்ல்ஸ்டிக்கன்ஸ் இரண்டுவயதுக் குழந்தையாக இருந்தபோது அவனது தகப்பனுரான ஜான் டிக்கன்ஸ் வேலையின் காரணமாக லண்டனுக்கு மாற்றப்பட்டார். லண்டன் மாநகரில் வளர்ந்துவந்த டிக்கன், இலத்தீன் மொழியை கற்றுக்கொண்டதின் பயனுக பிளாக்மூர் என்ற வழக்கறிஞரிடம் தனது 15-வது வயதிலேயே குமாஸ்தாவாக வேலைக்குப் போய்ச் சேர்ந்தான். வாழ்க்கையின் சகல விதமான பிரச்னைகளையும், பலதரப்பட்ட மக்களின் மனேபாவங்களையும். மாபெரும் இலண்டன் நகரத்து வாழ்க்கை முறைகளையும், கவர்ச்சிகரமான அவர்களது நடையுடை பாவனைகளையும் ஆழ்ந்து கவனிப்பதற்கு அப்போதுதான் டிக்கனுக்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. இத்தகைய வாய்ப்புகளால் கிடைத்த நேரடி அனுபவங்களினுல்தான் பிற்காலத்தில் டிக்கன்ஸ் மிகச் சிறந்ததொரு நாவல் ஆசிரியராக பரிணமிக்க முடிந்தது.

தனது 22-வது வயதில் 'மன்த்லிமெகசைன்' என்ற பத்திரிகைக்கு 'போஸ்' என்ற புனைப் பெயருடன் கதையெழுதத் தொடங்கிய அவர் பிற்காலத்தில் பல பத்திரிகைகளுக்கு ஆசிரியராகவும் ஒப்புயர்வற்ற பல நாவல்களின் படைப்பாளராகவும் சிறப்புற்று விளங்கினுர்.

1838-ல் வெளிவந்த 'ஆலிவர் டுவிஸ்ட்' என்ற அவரது நாவலில் தொழிற்சாலையில் வேலை செய்து வரும் ஓர் அநாதைச் சிறுவனைப்பற்றி உள்ளமுருக எழுதினுர். இந்நாவல் டிக்கன்ஸின் புகழை இலக்கிய உலகில் நன்கு வேருன்றும்படிச் செய்தது. அடுத்த பத்து ஆண்டுக் காலத்தில் டிக்கன்ஸ் ஏராளமாக எழுதிக் குவித்தார்.

ஆங்கிலேயர்களிடம் காணப்படும் குறைகளையும், முணக்கேடுகளையும் கண்டித்து தாக்கும் வகையில் 'மார்ட்டின் சஸ்லில்விட்' என்ற நாவலையும் ஒருபணக்கார வியாபாரி கொண்டுள்ள அகம்பாவத்தை எதிர்த்துச் சாடும் வகையில் 'டாம்பே அண்டு ஸன்' என்ற நாவலையும் அவர் எழுதி வெளியிட்டார். டாம்பே அண்டு ஸன் என்ற நாவலின் உன்னதமான வெற்றி அவரை புகழ்ச்சிகரத்தின் உச்சிக்குக் கொண்டுபோய் நிறுத்தியது.

'ஓல்டு கியூரியாஸிடி ஷாப்' என்ற நவீனம் டிக்கன்ஸின் புகழை இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஒருங்கே சேர்த்தது. இக்கதையின் இளங் கதாநாயகி என்ன ஆகிருள் என்பதை அறிந்து கொள்வதற்கான ஆவல் மிகுதியினுல் இந்நாவலின் கடைசிப் பகுதியை ஏற்றி வந்த கப்பல் கரை சேருவதை எதிர் நோக்கித் துறைமுகத்தில் மக்கள் காத்துக் கிடந்தனராம்.

பிரபல சரித்திர ஆசிரியர் தாமஸ் கார்லைல் டிக்கன்ஸ் பற்றிய தம் அபிப்பிராயத்தை பின் வருமாறு வெளியிட்டார்.

"பரிசுத்தமான அவரது நீலநிறக் கண்கள் புத்திக் கூர்மையை வெளியிட்டன. ஆச்சரியத்தின் போது அவரது புருவங்கள் அழகாக வளைந்தன. பேசும்போதோ அவர் ஒரு தனித்தோரணையில் தம் முகத்தை—ஏன் புருவம், கண்கள், வாய் எல்லாவற்றையுமே அசைத்தபடி பேசினுர்."

சார்ல்ஸ் டிக்கன்ஸின் எழுத்தாற்றலுக்கு சாசுவதமான காட்சிகளாக விளங்கி நிற்கும் 'டேவிட்' காப்பர்ஃபீல்டு,' 'நிக்கோலாஸ் நிக்கில்பி,' 'பார்னபி ரட்ஜ்,' 'லிட்டில் டோரிட்,' 'பிளீக்ஹவுஸ்,' 'டேல் ஆஃப் டு ஸிட்டீஸ்,' 'கிரேட் எக்ஸ்பெக்டேஷன்ஸ்,' அவர்மியூச்சுவல் ஃபிரண்ட்' போன்ற நாவல்கள் எத்தனை முறை படித்தாலும் சுவை குன்ருதவை.

'எட்வின் ட்ரூடின்' என்ற நாவலை அவர் எழுதத் தொடங்கிய சமயத்தில் அவரது உடல் நிலை கெடத் தொடங்கியது. அவரது முந்தின நாவல்களைப் போலன்றி முற்றிலும் புதிய முறையில் எழுதத் துவங்கிய இந்த துப்பறியும் நாவல் துரதிர்ஷ்டவசமாக முடிவுருமலே போயிற்று. சமூகத்தின் தீமைகளை தன் சக்தி மிக்க எழுத்துக்களால் சாடிய சார்ல்ஸ் டிக்கன்ஸ் 1870—ஆம் ஆண்டு ஜூன் 8-ஆம் தேதியன்று தன் நினைவிழந்தார். இரவு முழுவதும் ஞாபகமற்ற நிலையில் இருந்து, மறுநாள் இம்மண்ணுலகிலிருந்து விடுபட்ட இந்த மகத்தான மனிதரை உலகம் என்றென்றும் ஞாபகம் வைத்திருக்கும்.

—எஸ். டி. போஸ்.

★

காந்தி நூற்றுண்டு விழா
நினைவுக்கு……

அதுதான் நம் இலட்சியம்!

காந்தியடிகள் மறையவில்லை. நம்மோடு இருக்கிருர். நம்முள் இருக்கிருர். நம்முடன் கலந்துவிட்டார் என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மடிந்திடவில்லை. அவைகளை, நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திட வேண்டும்.

—காந்தியடிகளைப்பற்றி அண்ணு

தமிழா! ஏ, தமிழா!

—முத்து—

தமிழா! ஏ தமிழா!

தமிழனை நினைத்தால் ஒருபுறம் வேதனையாய் இருக்கிறது! இன்னொருபுறம் இரக்கம் பிறக்கிறது!

நமக்குப் பிறக்கிற இரக்கம் உலகத்தின் மற்ற இடங்களில் பிறக்கவில்லையே!

ஒவ்வொரு நாளும் பொழுது விடிகின்றபோது, தமிழனுக்கும் சோதனையோடுதானா அது விடிய வேண்டும்?

எங்கே வாழ்ந்தாலும் தமிழன், நாளைக்கு நம் நிலை யென்ன என்ற நிலையற்ற தன்மையோடா இரவு படுக்கைக்குப் போகவேண்டும்?

அவன் உலகத்தில் சிறந்த நாகரிகம் ஒன்றைப் படைத்து வாழ்ந்த கதை வெறும் வரலாறு! பிறந்த மண்ணில் வாழ வகையின்றி வதைபட்டு, கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று, காடு திருத்தி, கழனி ஆக்கி, பயிர் விளைத்து, அறுத்தெடுத்து, தான் சென்ற இடத்திலெல்லாம் செழுமை சேர்த்திருக்கிறான்—செம்மை செய்திருக்கிறான், அது கடந்த காலம்!

ஆனால் எப்போதும் தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படும் இயற்கையின் துடிப்பு தமிழன்! தோன்றும் துறையெல்லாம் தூய்மை செய்து துலங்கத் தெரிபவனாயிற்றே தமிழன்!

கீர்த்திக்கு உரியவர்களுக்கு முடிசூட்டி அதைப் பார்த்து மகிழ்வதிலேயே பேரின்பம் காண்பவனாயிற்றே தமிழன்!

இருந்தும், நன்றி பொங்கும் கண்களோடே நாலு நல்ல வார்த்தை அவனுக்குச் சொல்ல ஆளில்லை!

அது என்ன சாபக் கேடோ?

பர்மாவில் — மலேசியாவில் — சிங்கப்பூரில்—ஈழத்தில்—எந்த மண்ணிலும் தமிழன் 'வாழ்ந்தான்.' அவற்றில் பர்மாவும்—ஈழமும் போட்டி போட்டுக்கொண்டு தமிழனைக் கப்பலேற்றுகின்றன.

இப்போது இன்னும் ஒரு புதுக் கொடுமை தமிழருக்குச் சேர்ந்துவிட்டது!

சாதாரண வழக்கறிஞர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அரசியலில் நுழைந்ததே. தென்னப்பிரிக்காவின் நேட்டாலில் — டர்பனில் — குறிப்பாகத் தமிழருக்கும், பொதுவாக இந்தியருக்கும் இழைக்கப்பட்ட கொடுமையைக் கண்டித்துத்தான்!

அந்தக் காந்தியாரின் நூற்றாண்டு விழா தொடங்குகையில் இன்னும் ஒரு சேதி வருகிறது!

தமிழகத்தில் வாழுகின்றார் மூன்று கோடித் தமிழர் என்றால், உலகத்தில் எங்கணுமாய்ப் பரந்து நிற்கும் தமிழர் தொகை ஒரு கோடி!

அந்தத் தமிழரெல்லாம் தமிழ் மண்ணைத் தாயகமாய்க் கொண்டோர் அல்லர்; போதி சத்துவன் பிறந்த மண்ணுக்குப் பௌத்தர்கள் வைத்திருக்கும் புனிதமிக்க மரியாதை போலத்தான் அவர்கள் தங்கள் தமிழின் தாயகமான தமிழகத்தின்மீது வைத்திருக்கிறார்கள்!

ஆனாலும் அதற்காகவே அவர்கள் பழிவாங்கப் படுகிறார்கள் என்பதும் உண்மை.

தென்னகத்தின் மேலைக் கடலை யொட்டி சில நூறு நூறு மைல்களுக்கப்பால் மொரீஷஸ் (என்றொரு தீவு! இந்தியாவின் கீழைக் கடலை யொட்டி அந்தமான் இருப்பதுபோல, மேலைக் கடலை யொட்டி மொரீஷஸ் தீவு!

அந்தமான் இந்தியாவுக்குச் சொந்தம்; மொரீஷஸ் இந்தியாவுக்கு உரிமை இல்லாத இடம். அவ்வளவே!

அந்தமானில் இந்தி வெறி பிடித்தவர்கள் தமிழ் மொழியை—தமிழ்க் கலாசாரத்தை—வாழ்க்கை முறையைத் திட்டமிட்டுத் தகர்க்கிறார்கள் என்றால், மொரீஷஸில் ஆங்கில, அமெரிக்க பிரெஞ்சுக்காரர்களின் சுவை கண்ட விஷக் கரங்கள் தமிழினத்தைச் சாய்ப்பதிலே முனைந்துள்ளனவாம்!

உதவாக்கரைச் செய்திகளுக்கெல்லாம் எட்டுப் பத்தியில் தலைப்புக் கட்டிச் செய்தி போடுகிற நாளிதழ்கள், இந்தச் செய்தியை 7-ம் பக்கத்திலும், எட்டாம் பக்கத்திலும் எங்கோ ஒரு மூலையில் வெளியிட்டிருக்கின்றன.

மொரீஷஸ் தீவிலே இருந்து செய்தி—ஒலி பரப்புத் துறை அமைச்சர் ராம்நாத் ஜீடா அண்மையில் சென்னைக்கு வந்தார். தம் துறையை ஒட்டிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். தமிழகச் செய்தித் துறை அமைச்சரையும் சந்தித்தார்.

அப்போதெல்லாம் அவர் உதிர்த்த கருத்துக்கள் இரத்தக் கண்ணீர் வரவழைக்கின்றன! — உணர்ச்சி உள்ள தமிழரை உசுப்பிவிடுகின்றன!

மொரீஷசின் மக்கள் தொகையில் 68% பேர்—அதாவது மூன்றில் இரண்டு பங்கினர் இந்திய வமிசா வழியினர் —பெரும்பாலும் தமிழர்! கந்தன் — முருகன்—சுந்தரம்— முத்து போன்ற பெயர்கள் அவர்களிடையே பெருவழக்காய் உள்ளனவாம்!

புதிய தொடர்கதை!
20-10-'68 முதல்

புதியதொரு கோணத்தில்
புதுமைப் பொலிவோடு
உள்ளத்தின் பொல்லாத்தனத்தை
உணர்ச்சிப் பிழம்பாய்

எஸ். எஸ். தென்னரசு

வடித்துத் தரும்

ஒரே ரத்தம்!

ஆரம்பமாகிறது!

என்றாலும்......தமிழுக்கு அங்கே வாழ்வு இல்லையாம். கொடுமை! கொடுமை!!

தமிழ்—தமிழர் வாழ்க்கை முறை—தமிழ்க் கலாசாரம் ஆகியவற்றைத் தலைதூக்கவொட்டாமல் அடித்து ஆனந்தக் கூத்து ஆடுகின்றனவாம் அங்குள்ள வெவ்வேறு சக்திகள்!

தமிழினத்தையே சாய்த்து அழிக்கும் திட்டமிட்ட வேலையில் ஆங்கில—அமெரிக்க — பிரெஞ்சு சக்திகள் முனைப்போடு ஈடுபட்டுள்ளனவாம்.

மக்களின் எதிர்ப்பையும் மீறி பிரெஞ்சு மொழியைத் திணித்துக் கொண்டிருக்கிறார்களாம் தமிழர் தலையில்!

நூற்றுக்கு 68 பேர் உள்ள இனத்துக்காக ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகள் மொத்த வானொலி நிகழ்ச்சி நேரத்தில் 7% மட்டுந்தானாம்!

வஞ்சனைக்கும் ஓர் அளவில்லையா? இதைக் கேட்பதற்குத் தகுதி படைத்தது இந்திய அரசு ஒன்றுதான்! கேட்க முன் வருமா இந்திய அரசு? கேட்டால் என்ன ஆகும்?

"உன் கண்ணில் உத்தரம் இருக்கிறது. முதலில் அதை எடு; பிறகு என் கண் தூசிக்கு வரலாம்" என்றல்லவா சொல்லுவார்கள்!

பிறந்த மண்ணிலேயே தமிழன் எத்தனையோ விழிப்புடன் இருந்தாலும் ஆயிரம் வகைகளில் இந்தியைத் திணித்திட இந்திய அரசின் இந்தி ஏஜெண்டுகள் முயல்கிறார்களே!

'விவித பாரதி' நிகழ்ச்சியில் தமிழுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் நமக்குத் தெரியாதா? இவ்வளவு கொடுமைகளை இங்கே இழைத்துக்கொண்டு அங்கே நடப்பதை எப்படிக் கேட்பது?

இருந்தும் இல்லாமல் தமிழன் மொரீஷசில் வாழ்கிற அவலத்துக்குக் காரணம், ஆங்கில — அமெரிக்க — பிரெஞ்சுப் பிரசாரங்களுக்கு ஈடுகொடுக்கத்தக்க இந்திய அரசின் பிரசாரம்—தமிழில் பிரசார வாய்ப்புகள்-இல்லாமை என்று சுட்டிக் காட்டிக் குமுறுகிறார் ராம்நாத் ஜீடா!

நாடே திரண்டெழுந்து காந்தியாருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிற இந்த நாளிலாவது தமிழ்நாடு காங்கிரசாருக்கு சொரணை வந்தால் சரி!

'ஓகோ' என்று இருபதாண்டுகள் காங்கிரசுக்காரர் ஆண்டதுதான் மிச்சம். கண்ட கண்ட பிரச்சினைகளில் கருத்துச் சொல்லி உலகத்து நாடுகளின் வெறுப்பை வாரிக் கட்டிக் கொள்வதிலேதான் வெளி விவகாரத் துறைக்கு இன்பம்!

இந்த மாதிரிச் சின்னத் தீவுகளில் இருபதாண்டுகளில் எவ்வளவோ செய்திருக்கலாமே! இந்தியாவின் கடல் பாதுகாப்புக்கேகூட அது எவ்வளவோ பயன்பட்டிருக்குமே!

தமிழ்நாடு காங்கிரசாருக்கோ, 'பழிக்குப்பழி,—இரத்தத்துக்கு இரத்தம்!' என்று ஆபாச அரசியலை நோக்கி மக்களை ஆவேசமாகத் துரத்தத்தான் நேரமிருக்கிறது!

எதிலும் அரசியல் பண்ணுகிற பாவிகள் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு ஆக்க ரீதியில் அரசியல் நடத்தலாமே!

உழைப்பவன் ஒருவன், அதைவைத்து பிழைப்பவன் ஒருவன், புகழ் சேர்த்துத் தழைப்பவன் ஒருவன் என்று இருக்கிற அரசியல் உலகத்தில் காங்கிரசுக்காரர்கள் கண்ணில் இது படுமா?

'ஏராளமான தமிழ்ப் புத்தகங்களை அனுப்புங்கள், நல்ல தமிழ்ப் படங்களை—புதிதாக இல்லாவிட்டாலும் பழைய தமிழ்ப் படங்களை — அனுப்பி வையுங்கள். அங்கே சாஸ்திரீய—கிராமிய தமிழ்ப் பாடல்கள் பிரபலமாக உள்ளன; மக்கள் அவற்றை விரும்பி வரவேற்கிறார்கள். எனவே அந்த வகைகளில் மொரீஷஸ் தமிழரின் அவாவினைப் பூர்த்தி செய்யுங்கள்'

தென்னிய பிலிம் வர்த்தக சபையில் மொரீஷஸ் அமைச்சர் ராம்நாத் ஜீடாவின் உருக்கமான வேண்டுகோள்! இது

'தமிழ் என்றால் உயிர் கொடுத்த கூட்டம் இங்கு உண்டு. உயிர் மட்டும் உடையவர்களின் தியாகம் அது!

ஆனால் அது பயன் தாரது!

தமிழ்க் கலை வளர்க்கும் பெருந்தலைகள் இங்கே இருக்கிறார்கள்! அவர்கள் ஆளுக்கொரு கைபோட்டால் போதும்! மொரீஷசில் மாய்ந்துகொண்டிருக்கும் தமிழ் மரபின் மானங் காப்பாற்றி மலரவைத்து மணம் பரப்பலாம்.

மத்திய அரசு மனம் வைத்தால்தான் மொரீஷஸ்—தமிழரை தமிழராய் வாழவைக்க முடியும்!

இதற்குத் தமிழ்நாடு காங்கிரசின் துணைதேவை. மத்திய அரசோடு இது குறித்து மாநில அரசு போராடும்போது அவர்கள் துணையில்லாவிட்டால் கூடப் போகிறது; தொல்லை தராமல் இருந்தால் போதும்!

தமிழா! ஏ தமிழா!!

நீ எங்கோ இருந்து உன் தாய்மொழியின் பிறந்தகத்தைக் கற்பனையில் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறாய்!

உன்னை நினைத்தால் வேதனையாகத்தான் இருக்கிறது! மொரீஷஸ் தமிழரின் ஏக்கம் துடைக்கும் இங்குள்ள தமிழர் இன்றே திரளுவர். மீண்டும் தமிழ் வாழ்வு வாழ தாயகத் தமிழர் தயங்காது துணைசெய்வர் என்ற நம்பிக்கையோடு அவர்கள் இருக்கலாம்.

கடல் கடந்து, காலங் கடந்த தமிழ் மரபின் புகழ் காக்கும் ஊற்றுக்கால் போன்ற இந்த மொரீஷஸ் தோழர்களின் நம்பிக்கை வீண்போகாது.

அமைச்சர் ராம்நாத் ஜீடா தமிழ் மக்களின் இந்த நல்லெண்ணச் சேதியைக் கொண்டுசெல்லட்டும்!

★

வரதராசனார் வாய் திறந்தார்!

மொழிப் பிரச்னை குடுமிபிடிக்குது நாட்டை எந்தெந்த அளவுக்கு உலுக்கிவிட்டிருக்கிறது! தமிழர்கள் 25 ரூபாய் கொடுத்தால் போதும்; இந்தி படித்துக்கொள்வார்கள்! என்றெல்லாம்கூட இழித்துரைக்கப்பட்டார்கள்! என்றாலும் தமிழ்த்துறைத் தலைவர் இது பற்றி வாய் திறக்கவே இல்லை! மூடி இருந்த வாயைத் திறந்துவிட்டிருக்கிறார்! இப்போது!

"அறிவு வளர்ச்சிபெற தாய்மொழியான தமிழும், மற்றவர்களின் கருத்தை அறிந்துகொள்ள ஆங்கிலத்தையும் அறிந்துகொண்டால் போதும்! 3-வது மொழி நமக்குத் தேவை இல்லை!"

'தேவை இல்லை' என்று பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் தீர்ப்பு வழங்கி இருக்கிறார். இது காலத்தே வந்திருந்தால்...

கேள்வி ? பதில்

1. மத்திய அரசு ஊழியர்களுக்கு எதிராகவா 'காஞ்சி' செயல்படுகிறது?

'காஞ்சி' தனிப்பட்ட எந்த ஒருவருக்கு எதிராக — அல்லது ஆதரவாக செயல்பட்டதுமில்லை—செயல்படுவதுமில்லை. ஜனநாயக நெறிப்படி எந்த ஒரு அரசியல் கட்சியும் ஆட்சிக்கு வர வாய்ப்பிருக்கிறது. அரசியல் அதிகாரம் தான், ஆளுகின்ற கட்சிக்குச் சொந்தமாக இருக்க முடியுமே தவிர, அரசின் ஊழியர்களையும் தன் "பிடியுள்" கொண்டிருக்க நினைக்கவும் கூடாது. அந்த வகையில், மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் கொள்கை ரீதியாக மாற்றுக் கருத்துப் படைத்திருக்கும்போது 'அரசு' தான் கண்டனத்திற் குரியதாக விருக்குமே தவிர, அதன் ஊழியர்கள் கண்டனத்துக் குரியவர்கள் அல்லர். ஆனால், வேலைநிறுத்தம் என்கிற தொடர்பில் அரசு, ஊழியர்களானாலும் சரி, பிற தனியார் துறை ஊழியர்களானாலும் சரி, நடத்தப் பெறுகிற "வேலை நிறுத்தம்" கண்டிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் நாட்டின் இன்றைய நிலைமைக்காக! அரசு ஊழியர்கள் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் சொந்தமானவர்கள் அல்லர்! அப்படிச் சொந்தம் கொண்டாடி அவர்கள் மூலம் ஆட்சிக்குச் சொந்தம் கொண்டாடிவிடவும் முடியாது. அதனால்தான் மத்திய அரசு ஊழியர்கள் விஷயத்தில் இருதரத்தாரும் 'காஞ்சி'யினால் கருத்துரைக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வளவே!

2. "முதலாளித்துவப் போக்கு" என்றால் என்ன?

உழைப்பாளர்கள், உழைப்புக்கும், தொழிலாளர்கள்' தொழிலுக்கும் முன்னுரிமை கொடுத்துவிட்டு, அதன் மூலம் நாட்டில் ஒரு பொருளாதார மறுமலர்ச்சிக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டுவிட்டு, 'உரிமை'கள் பற்றிய கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம்—ஆர்ப்பாட்டங்கள் முதலியவைகளில் ஈடுபடுவது தான் ஒரு நாட்டின் ஆரோக்கியமான பண்பாடு என்று கூறப்படுவதை கம்யூனிஸ்டுக் கட்சி, 'முதலாளித்துவம்' என்று விமர்சிக்கிறது!

3. தொழிலாளர்களுக்கும், உழைப்பாளர்களுக்கும் கூலி உயர்வு கொடுப்பதன் மூலம்தான் விலை உயர்வு ஏற்படுகிறதென்ற 'மேதைமை' கண்டிக்கத் தக்கதில்லையா?

இதற்கு 'மேதைமை' என்ன வேண்டிக்கிடக்கிறது? விலைவாசி உயர்வுக்கு இவையும் ஒரு காரணம் என்பதுதானேஒழிய, இவைதான் காரணம் என்று அறுதியிட்டா கூறப்பட்டுள்ளது? விலை உயர்வு என்பது சிக்குகள் மலிந்துள்ள ஒரு பின்னல் வலை. கூலி உயர்வு என்பது அதிலுள்ள ஒரு சிக்கல்! அவ்வளவுதான்!

4. கடமையும் உரிமையும் நாணயத்தின் இருபக்கங்களைப்போல இருக்கவேண்டுமில்லையா?

இருக்கத்தான் வேண்டும்; இருக்கிறதா இந்த நாட்டில்? கூலி உயர்வு ஒன்றுமட்டுமே நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அல்லது தொழிலாளர் முன்னேற்றம் ஆகிவிடுமா என்ன!

5. வாழ்க்கை ஒரு போராட்டம்—விளக்கம் தரமுடியுமா இதற்கு?

ஏன் முடியாது! வாழ்க்கை என்பது பணத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. பணம் தொழிலோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. தொழில் அரசியலோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் போராட்டங்களோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, வாழ்க்கை ஒரு போராட்டமாகி விடுகிறது!

6. கட்சி விவகாரங்கள் நீதிமன்றம் வரையில்கூட செல்வது விரும்பத்தக்கதா?

என்ன செய்வது? ஜனநாயகப் புத்தகத்தில் இப்படிப்பட்ட சில பக்கங்களும் இருக்கின்றனவே! 'ஜனநாயகம் என்பது ஒரு கிணறு போன்றது; அதில் நீரெடுத்துப் பயன்படுவோரும் உண்டு; கல்லைப் போட்டுமூட விரும்புவோரும் உண்டு' என்பது பேரறிஞர் அண்ணாவின் மணிமொழி.

7. 'காஞ்சி'யில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்?

பலதரப்பட்ட வாசகர்களையும் திருப்திப்படுத்த வேண்டும் என்பதே 'காஞ்சி'யின் விருப்பம்!

காந்தி நூற்றாண்டு விழா சிந்தனைக்கு...

அவரால் முடிந்தது!

காந்தியடிகளின் புகழொளி மூலமே உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னலமற்ற, விளைவு பற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தியடிகளால்தான் உண்டாக்க முடிந்தது. அதற்கு முன்பெல்லாம் விடுதலை கோரி மனுச்செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ நடவடிக்கையோ இராணுவ மனப் பான்மையை ஏற்படுத்தக் கூடியதாக இல்லை. அனால் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக் கூடிய வீர உணர்ச்சியை இலட்சக் கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

—காந்தியடிகளைப்பற்றி அறிஞர் அண்ணா'

காஞ்சி 6—10—68 Regd. No. M. 8326

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

சித்தர் நவலோக கல்பம்

தங்கம், வெள்ளி, தாமிரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு.
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:
மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும், டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும் பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்

நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—3
8C, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.